**பத்திரிகை வெளியீடு**

கொழும்பு, 18 ஒக்டோபர் 2018

Good Food, Good Life

## சிறுவர்களும், அவர்களது குடும்பத்தினரும் உடற்பயிற்சி நிறைந்த வாழ்வை முன்னெடுக்க உதவுவதற்காக மீண்டும் ஒரு முறை 1,000 மவுன்டன் பைசிக்கிள்களை *மைலோ (Milo)* வழங்கவுள்ளது

சிறுவர்களும், அவர்களது குடும்பத்தினரும் உடற்பயிற்சி நிறைந்த வாழ்வை முன்னெடுக்க உதவுவதற்காக, 1,000 அதிர்ஷ்டசாலி சிறுவர்கள் மைலோவின் அனுசரணையில் புத்தம்புதிய மவுன்டன் பைசிக்கிள்களை வெல்லவுள்ளனர். தாங்கள் கொள்வனவு செய்கின்ற ஒவ்வொரு *Milo* RTD (Ready-To-Drink) பக்கட்டுக்கும் விற்பனையாளர் வழங்கும் சுரண்டும் அட்டையைச் சேகரித்து எந்தவொரு மொபைல் சேவை வலையமைப்பிலிருந்தும் MB<இடைவெளி>குறியீடு<இடைவெளி>பெயர்<இடைவெளி>வயது (MB<space>Code<space>Name<space>Age) என்ற வடிவத்தில் டைப் செய்து அட்டையில் காணப்படும் தனித்துவமான குறியீட்டை 6456 என்ற இலக்கத்திற்கு எஸ்எம்எஸ் (SMS) செய்வதன் மூலமாக மிக இலகுவாக இப்போட்டியில் பங்குபற்ற முடியும். இப்போட்டியானது 2018 நவம்பர் 30 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளதுடன், இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை இடம்பெறும் அதிர்ஷ்டக் குலுக்கல் சீட்டிழுப்பின் மூலமாக வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவர். அதிர்ஷ்டசாலி வெற்றியாளர்கள் மாபெரும் பைசிக்கிள் பவனியில் தமது குடும்பத்தினருடன் சேர்ந்து கலந்துகொண்டு கொழும்பு நகரின் வீதிகளில் உலா வரும் வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளவுள்ளனர்.

உற்பத்திப் பிரிவின் சந்தைப்படுத்தல் முகாமையாளரான மொஹமட் அலி அவர்கள் கூறுகையில், *"மைலோ வர்த்தகநாமமானது 'வெற்றிக்கான உணர்விற்கு உந்துசக்தியளிப்பதில்' எப்போதும் முன்னின்று செயற்பட்டு வந்துள்ளதுடன், சிறுவர்கள் உடற்பயிற்சி நிறைந்த வாழ்க்கைமுறையை முன்னெடுப்பதற்கு அவர்களை ஊக்குவித்து வருகின்றது. சைக்கிளோட்டத்தின் மூலமாக தனியாகவோ அல்லது குழுவாகவோ உடற்பயிற்சியை முன்னெடுக்கும் நன்மை காணப்படுவதுடன், சிறுவர்கள் தமது நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் இணைந்து விநோதமான வழியில் ஒன்றாக உடற்பயிற்சியை முன்னெடுக்கவும் உதவுகின்றது. அணியாக செயற்படும் ஒன்றுபட்ட உழைப்பு மற்றும் சிநேகபூர்வமான போட்டியுணர்வை ஊக்குவித்தல் ஆகியவற்றைத் தோற்றுவிக்கவும் இது உதவுகின்றது. இம்முறை தொடர்ந்து நான்காவது ஆண்டாகவும் மவுன்டன் பைசிக்கிள்களை மைலோ பரிசாக வழங்குவதுடன், முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் இம்முறை சாதனை படைக்கும் எண்ணிகையில் இப்போட்டிக்கான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறும் என நாம் எதிர்பார்த்துள்ளோம். இப்பிரச்சாரமானது மக்கள் மத்தியில் மிகுந்த பிரபலமடைந்து வருவது, இவ்வர்த்தகநாமத்தின் மீது அவர்கள் வைத்துள்ள வலுவான நம்பிக்கை மற்றும் அபிமானம் ஆகியவற்றுக்கு சான்று பகருகின்றது,"* என்று குறிப்பிட்டார்.

இவ்வாண்டு பரிசாக வழங்கப்படவுள்ள பைசிக்கிள்களுடன் சேர்த்து, வர்த்தகநாமம் முன்னெடுத்துள்ள பல்வேறுபட்ட முன்னெடுப்புக்களினூடாக இது வரை வழங்கப்படவுள்ள பைசிக்கிள்களின் மொத்த எண்ணிக்கை 4,000 ஆக அதிகரிக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

நெஸ்லே நிறுவனத்தின் உற்பத்தியான மைலோ, விட்டமின்கள் மற்றும் கனியுப்புக்களின் செழுமை நிரம்பியதுடன், உலகில் முன்னிலை வகிக்கும் சொக்கிலேற்று மோல்ற்று பானமாக திகழ்ந்து வருகின்றது. பல்லாயிரக்கணக்கான இலங்கை உள்நாட்டு பாற்பண்ணையாளர்களிடமிருந்து சேகரிக்கப்படுகின்ற தரமான, புத்தம்புதிய பால், நலச்செழுமை மிக்க மோல்ற்று மற்றும் கொக்கோ விதைகள் ஆகியவற்றைக் கொண்டு இது தயாரிக்கப்படுகின்றது. "வெற்றிக்கான உணர்விற்கு உந்துசக்தியளிப்பதில்" அர்ப்பணிப்புடனான ஈடுபாட்டுடன் செயற்பட்டு வருகின்ற மைலோ, 30 ஆண்டுகளுக்கும் மேலாக பாடசாலை விளையாட்டுகளுக்கு ஆதரவளிப்பதில் முன்னின்று உழைத்து வந்துள்ளது. நுகர்வோர் தமது திறமைகளைப் பயன்படுத்தி, வாழ்வில் வெற்றி பெறுவதற்கு உதவி, அவர்களை ஊக்குவித்து வந்துள்ளதுடன், பல இலட்சக்கணக்கான சிறுவர்கள் உடற்பயிற்சி நிறைந்த வாழ்க்கை முறையை பின்பற்றுவதற்கு அவர்களை ஊக்குவித்துள்ளது. மேலும், பல்வேறு விளையாட்டு வீரர்கள் தமது விளையாட்டுத் திறன்களை வளர்த்துக் கொள்ளவும் அது ஆதரவளித்துள்ளது.